1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 07 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நிய-ாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து மற்றும் தபால் திணைக்களத்திடமிருந்து மீளாய்வாண்டில் சேர்க்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 22,258,705 ஆன கட்டிட வாடகை வருமானம், அரச கட்டிடங்கள் மற்றும் வீட்டு வாடகை வருமானக் குறியீட்டிற்கு செலவு வைக்கப்படாத காரணத்தினால் கட்டிட வாடகை வருமானம் அப் பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. தொழிற் திணைக்களத்தின் மூலம் சேர்க்கப்பட்டிருந்த சுற்றுலா விடுதிகள் மற்றும் விடுமுறை விடுதிகள் வருமானம் எவ்வளவு என்பதை கணிப்பிட்டு அப்பெறுமதியும் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொது நிர்வாகச் சுற்றறிக்கை 20/2021 மூலம் அரசின் கட்டிடங்கள் மற்றும் வீட்டு வாடகைகளுக்கான அனைத்து மூலங்களின் வருமானம் அரச கட்டிடங்கள் மற்றும் வீட்டு வாடகை (20.02.01.01) வருமானக் குறியீட்டிற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. தபால் திணைக்களம் , தொழிற் திணைக்களம் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களங்களுக்கான வருமானம் தலைப்பிற்கு செலவு வைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. | செலவு வைக்கப்பட வேண்டிய அனைத்து வருமானங்களும் செலவு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

1.6.2 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிச் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் வருடத்தில் சொத்துக்கள் கைப்பற்றல் ரூபா 379,872,930 ஆக இருந்ததுடன் நிதிச் செயலாற்றல் கூற்றின் இறுதி மீதி ரூபா 8,300,719,560 ஆகும். எனினும், திறைசேரி புத்தகத்தின் பிரகாரம் | இது திருத்தப்படுவதாக அரச கணக்குகள் திணைக்களத்திற்கு குறிப்பிட்டு அனுப்பட்டுள்ளது. | திருத்தம் மேற்கொள்ளப்பட்டு கணக்குகள் நாளது வரையாக்கப்பட்டு பேணப்படல் வேண்டும். |

நிதியல்லாச் சொத்துக்கள் மீதி ரூபா 8,282,093,941 ஆக இருந்தமையால் ரூபா 18,625,619 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

2. நிதி மீளாய்வு

2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 யூலை 22 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கைகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரால் வருமானம் சரியாக மதிப்பிடப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா 1,200,000,000 மற்றும் தேறிய வருமானம் ரூபா 1,288,512,491 ஆக இருந்தமையால் ரூபா 88,512,491 அதிகமாக இருந்தது. இந்த அதிகரிப்பிற்கு covid -19 தொற்று நோய் நிலைமை காரணமாக விடுதிகள் மற்றும் விடுமுறை விடுதி ஒதுக்கீடுகள் அதிகரித்திருந்தமையை காரணமாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 1500 மில்லியன் ஆரம்ப மதிப்பீடு ரூபா 1,200 மில்லியனாக திருத்தப்படுவதற்கு காரணமாக covid -19 தொற்று நோய் நிலைமை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட வருமானம் பெறுவனவுகள் குறைவடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | ஆரம்ப வருமானம் மதிப்பீடு திருத்தப்படுவதற்கு, Covid – 19 காரணமாக எதிர்பார்க்கப்பட்ட வருமானம் குறைவடையலாமென எதிர்பார்க்கப்பட்டமையாகும். ஆனால் 2021 ஆம் வருடத்தின் நடுப்பகுதியின் பின்னர் Covid – 19 தொற்று நோய் நிலைமை ஓரளவு தணிந்ததால், சுற்றுலா விடுதிகள் மற்றும் விடுமுறை விடுதிகள் வருமானம் அதிகரித்தமையால் திருத்திய வருமான மதிப்பீட்டு வருமானத்தை விட உண்மையான வருமானம் அதிகரித்திருந்தது. | 2015 யூலை 22 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் ரூபா | நிலுவை வருமானம் அறவிடப்படுவதற்கு விரைவில் | நிலுவை வருமானம் அறவிடப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | 309,146,648 ஆகும். மீளாய்வாண்டிலும் நிலுவை வருமானத்தில் ரூபா 78,652,447 அறவிடப்பட்டிருந்தும் ரூபா 92,352,532 ஆன நிலுவை வருமானமொன்று வருடத்தில் சேர்க்கப்பட்டிருந்தது. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது ரூபா 6,489,129 ஆல் உயர்ந்துள்ளது. அதன் பிரகாரம் நிலுவை வருமானம் வருடந்தோறும் அதிகரிப்பதை கட்டுப்படுத்துவதற்கு போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 1993 யூலை 21 ஆந் திகதிய 320 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கைக் கடிதத்தின் பிரகாரம் நிலுவை வருமானம் சேகரிக்கப்படாத காரணத்தினால் அரசிற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்குமாறு உரிய நிறுவன தலைவர்கள் மற்றும் வரிசை அமைச்சின் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் மேற்பார்வை செய்வதன் மூலம் வருமானம் அறவிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | விரைவுபடுத்தப்படல் வேண்டும். |
| (இ) | நிலுவை வருமானத்தில் ரூபா 188,666,723 ஆனது 2018 திசெம்பர் 31 இற்கு முன்பிருந்து காணப்பட்டு வருகின்ற மீதி என்பதுடன் அது மொத்த நிலுவை வருமானத்தில் 58 சதவீதமாகும். இது நிலுவைத் தொகையுடன் நேரொத்த வருடத்தில் சேகரித்தல் ரூபா 14,602,703 மட்டுமே ஆக இருந்ததால் மிகுதி நிலுவைத் தொகையை அறவிடுதல் சந்தேகத்திற்கு உரியதாகக் காணப்பட்டது. | 2018.12.31 இற்கு முன்பிருந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்ததிற்கு ஒப்பந்தப் பிரகாரம் வாடகைக் கொடுப்பனவுகள் மீறப்பட்டிருந்தமை, விடுமுறை விடுதிகளின் வாடகை அறவிடப்படாமை, மதிப்பீடு செய்யப்பட்ட போது ஏற்பட்ட சிக்கல்கள் போன்ற விடயங்கள் காரணமாக இருந்ததுடன் நிலுவை வருமானம் அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு உரிய நிறுவன தலைவர்கள் மற்றும் வரிசை அமைச்சின் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அறவிடப்படல் அல்லது தீர்க்கப்படல் விரைவில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிலுவை வாடகை வருமானத்தில் ரூபா 58,781,895 அதாவது 31 சதவீதம் அரச விடுதிகள் மற்றும் லொரிஸ் ஒழுங்கையிலுள்ள வீட்டு வாடகை என்பதுடன் மீளாய்வாண்டில் இவ் வீட்டு நிலுவை வாடகை சேகரிக்கப்பட்டிருந்தமை ரூபா 2,006,587 மட்டுமே என்பதால் அது சதவீதமாக நூற்றுக்கு 3 ஆகும். மேலும் இந் நிலுவை மீதிகளில் ரூபா 7,915,908 ஆனது 92 அமைச்சர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. அதில் ரூபா 5,191,050 ஆனது 2012 ஆம் வருடத்திலிருந்து 2020 வரையில் 72 அமைச்சர்களின் நிலுவை மீதிகள் ஆகும். | அரச விடுதிகள் மற்றும் லொரிஸ் வீடுகளில் வசிக்கும் அரச அமைச்சர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வீட்டு வாடகை விரைவில், தீர்க்கப்படுவதற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், சில அமைச்சர்கள் மரணித்தமை, சில அமைச்சர்களின் தனிப்பட்ட முகவரிகளில் எவரும் இல்லாததால் கடிதங்கள் மீண்டும் திரும்பி வந்தமை மற்றும் தொலைபேசி அழைப்புக்களுக்கு முறையாகப் பதில் அளிக்காத காரணத்தினால் நிலுவை வாடகை வருமானத்தை அறவிடுவது தாமதமாகியுள்ளது. சில அமைச்சர்கள் பணியாற்றிய அமைச்சுக்களிடமிருந்து வீட்டு வாடகை அறவிடப்பட்டிருந்ததாக முன்னாள் அமைச்சர்கள் தெரிவித்திருந்தும் அமைச்சுக்கள் மாற்றியமைக்கப்பட்டதால் தகவல்கள் கண்டுபிடிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அறவிடப்படல் அல்லது தீர்க்கப்படல் விரைவில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (உ) | சம்மேளன வீடுகள் மற்றும் கெப்பட்டிப்பொல வீடுகள் வழங்கப்பட்ட 97 பேரிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் அறவிட வேண்டிய தொகை ரூபா 4,926,903 ஆகும். அதில் 48 பேரிடமிருந்து ரூபா 1,756,932 ஆனது 2012 ஆம் வருடத்திலிருந்து, 2020 ஆம் வருடத்திற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அறவிடப்படாது காணப்பட்ட மீதிகளாகும். மேலும் ஜயவர்த்தனகம வீடுகளில் வசிக்கும் 24 பேரிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 9,043,845 என்பதுடன் அதில் 21 பேரிடமிருந்து 2012 ஆம் வருடத்திலிருந்து 2020 ஆம் வருடத்திற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அறவிடப்படாது காணப்பட்ட மீதி ரூபா 8,854,776 ஆகும். | சில உத்தியோகத்தர்களிடமிருந்து அமைச்சுக்கள் மூலம் வீட்டு வாடகை அறவிடப்பட்டுள்ளதுடன் அவ்வறிக்கை எமக்கு அனுப்பி வைக்கப்படாததால் தகவல் நாளது வரையாக்கப்படுதல் தாமதமாகியமையால் நிலுவை வாடகையொன்று காணப்பட்டது. சம்மேளன மற்றும் சாது வீடுகளில் வசிக்கும் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை தொடர்பாக கடிதங்கள் மூலம் மற்றும் தொலைபேசி அழைப்புக்களின் மூலம் தெரியப்படுத்தியுள்ளதுடன் மேலும் உத்தியோத்தர்களுக்கு கடிதம் மூலம் மற்றும் தொலைபேசி அழைப்புக்களின் மூலம் தெரியப்படுத்தி விரைவில் நிலுவைத் தொகை தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | நிலுவை வருமானம் அறவிடப்படல் அல்லது தீர்க்கப்படல் விரைவில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

2.2 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 7 மூலதனச் செலவு விடயங்களின் மற்றும் 02 மீண்டெழும் செலவு விடயங்களின் மொத்த ஒதுக்கங்கள் முறையே ரூபா 85,900,000 மற்றும் ரூபா 900,000 ஆக மொத்தம் ரூபா 86,800,000 சேமிக்கப்பட்டிருந்தது. இதில் மூலதன ஒதுக்கம் 85,150,000 ஆனது 08 மாத காலப்பகுதியில் செலவிடப்படாது பிடித்து வைக்கப்பட்டு , சேமிக்கப்பட்டமைக்கு காரணமாக 2021 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய MF/NB/07/CM/2021/163 ஆம் இலக்க நிதி அமைச்சின் கடிதத்தின் மூலம் செலவுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாக குறிப்பிடப்பட்டிருந்தது. | Covid – 19 தொற்று நோய் காரணமாக அலுவலகம் மூடப்பட்டிருந்தமையால் வாகனங்கள் பெருமளவில் ஒட்டப்படாது சிக்கனமாக வாகனங்கள் பராமரிக்கப்பட்டதன் காரணமாக அதிகளவு செலவுகள் ஏற்படாத காரணத்தால் இந்த ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தது. அமப/21/1596/304/134 மற்றும் 2021.09.07 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம் மற்றும் நிதி அமைச்சின் MF/NB/07/CM/2021/163 ஆம் இலக்க மற்றும் 2021.08.28 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அரச செலவுகள் கட்டுப்படுத்தல் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் மற்றும் 2021 இல் வெளிநாட்டுப் பயணச் செலவுகள் இல்லாதிருந்தமையால் இச் செலவு விடயங்களிற்கு உரிய ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. | நி.பி 50(ii) இன் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 17 மூலதனச் செலவு விடயங்களுக்கு மற்றும் 23 மீண்டெழும் செலவு விடயங்களுக்கு உரிய மொத்த தேறிய ஒதுக்கங்கள் ரூபா 1,278,727,000 என்பதுடன் மீளாய்வாண்டில் இறுதியில் அச்செலவு விடயங்களுக்கான மொத்தச் செலவுகள் ரூபா 620,262,014 ஆகும். அதன் பிரகாரம் சேமிப்பு ரூபா 658,464,986 ஆக இருந்ததுடன் அது 16 சதவீத்திலிருந்து 96 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | அரச செலவுகள் மீளாய்வின் பிரகாரம் ஒதுக்கங்கள் நிறுத்தி வைக்கப்பட்டமை, Covid -19 தொற்று நோய் நிலைமையால் ஏற்பட்ட தாக்கத்தினால் செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாட்டுச் செலவுகள் எதிர்பார்த்தவாறு செலவிடப்படாமை போன்றவற்றால் ஒதுக்கங்கள் சேமிக்கபபட்டிருந்தது. | - மேற்படி - |

2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 94(1) ஏற்பாடுகளுக்கு முரணாக 13 செலவு விடயங்களில் சேமிப்பை விஞ்சியதாக ரூபா 2,220,029 ஆன பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் இந் நிலைமையைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப்பிரமாண்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பொறுப்புக்களாக சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 908,230,776 ஆனது நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் கூற்றின் உள்ளடக்கப்படாததுடன், நிதிக்கூற்றில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்பட்டிருந்த ரூபா 26,815,177 ஆன பொறுப்புக்கள், சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 908,230,776.26 பெறுமதியான பொறுப்புக்கள் இவ் வருடத்திற்கு உரியவை அல்ல எனவும் முன்னைய வருடத்திற்கு உரிய பொறுப்புக்களாகவும் தொழில்நுட்ப தவறொன்று காரணமாக அவை காட்டப்பட்டிருப்பதால் எதிர்காலத்தில் இத் தவறைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொறுப்புக்கள் சரியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். |

2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரிக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| அவதானிப்புக்கள் | | | | |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | பிரமான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் XIX அத்தியாயம் | | | |
| (i) | 4.1 ஆம் பிரிவு | ஒரு அலுவலர் மட்டுமே அரச மனையைப் பெறுவதற்குரிய சந்தாப்பத்தை பெற | சட்ட உத்தியோகத்தர் பதவி இவ்வமைச்சின் கீழ் காணப்படுகின்ற திணைக்களத்திற்குரிய | தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முடிந்த போதிலும், காத்திருப்போர் பட்டியலில் 500 இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் மனைகளைக் கேட்டு விண்ணப்பித்திருந்த போதும் திருமணமாகாத உத்தியோகத்தர் ஒருவருக்கு 2015 செப்தெம்பர் 15 ஆந் திகதியிலிருந்து மனையொன்று ஒதுக்கப்பட்டிருந்தது. | பதவி ஒன்றாகும். அத்துடன் இந்த பெண் உத்தியோகத்தர் 10 ஆண்டுகளாக இவ்வமைச்சில் சட்ட உத்தியோகத்தராக பதவி வகித்த ஒரேயொரு பெண் உத்தியோகத்தர் என்பதால் சேவையின் தேவை கருதி சம்மேளன மனை ஒதுக்கப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | 6.1 ஆம் பிரிவு | அனைத்து மனைகளினதும் கால எல்லை 05 வருடங்கள் என்பதுடன் 2004 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து இதுவரை ஒரு உத்தியோகத்தருக்கு சம்மேளன மனையொன்று வழங்கப்பட்டிருந்தது. 2010 சனவரி 01 வரை மற்றும் 2011 சனவரி 01 வரை காலம் நீடிக்கப்பட்டதன் பின்னர் 2010 ஆகஸ்ட் 23 ஆந் திகதி விடுவிக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் சம்மேளன மனை இடித்து நீக்கப்படும் வரை வசிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த அனுமதியைப் பயன்படுத்தி 12 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக மனை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | குறிப்பிட்ட வீட்டுத்திட்டம் இதுவரை செயற்படுத்தப்படாத காரணத்தினால் இம் மனை மீண்டும் இந்த அமைச்சிற்கு கையளிக்குமாறு தொடர்ந்தும் தெரியப்படுத்தி வந்ததுடன் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | மனையை மீண்டும் கையளித்தல் தொடர்பாக தாபனக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (iii) | 6.2 ஆம் பிரிவு | ஒரு அரச உத்தியோகத்தருக்கு மட்டுமே அரச மனையொன்று ஒதுக்க முடியுமாக இருந்த போதிலும் 2 சம்மேளன வீடுகள் 1983 மற்றும் 2001 ஆம் வருடங்களில் மாதாந்தம் முறையே ரூபா 275 மற்றும் ரூபா | தற்போது அம் மனை இரண்டினதும் தற்போதைய மாதாந்த சுதந்திரமான சந்தை வாடகை மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து கோரப்பட்டுள்ளது. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 1,000 ஆன வாடகைக்கு இலங்கை நிர்வாக சேவை சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. | | |
| (iv) | 6.13 ஆம் பிரிவு | இலங்கை கணக்காளர் சேவையின் 1 ஆம் தரத்திலான உத்தியோகத்தர் ஒருவருக்கு 2019 ஆகஸ்ட்டிலிருந்து 2022 யூலை வரை வெளிநாட்டு விடுமுறை வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த உத்தியோகத்தர் அரச மனையை மீண்டும் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திரு.எச்.ஏ.என்.எஸ். குமார அவர்கள் தொடர்பாக மேறகொள்ளப்பட்ட விசாரணைய்யின் பரிந்துரைப் பிரகாரம் தாபனக் கோவையின் XIX அத்தியாயத்தின் 7.2 ஆம் பிரிவின் பிரகாரம் 2022.02.03 ஆம் திகதியிலிருந்து தண்டப்பணம் அறவிடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கப்பதற்கான சட்டரீதியான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது . | எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை விரைவு படுத்தல் வேண்டும் |

3. செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டம்

---

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்திட்டம் **(NLEAP-Canadian)** இற்காக மீளாய்வாண்டின் மதிப்பீட்டின் மூலம் 130-1-13-4-2509(13) இன் கீழ் வெளிநாட்டு மானியம் ரூபா 80,000,000 மற்றும் 130-1-13-4-2509(17) இன் கீழ் உள்நாட்டு நிதியத்தில் ரூபா 4,500,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் முழுமையான தொகையும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் சேமிப்பிற்கான காரணமாக தொற்று நோய் தாக்கமென்பது குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், வருடத்தில் இச் செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த வெளிநாட்டு மானியங்கள் எவ்வளவு என்பதற்கான தகவல்கள் பெறப்பட்டு கணக்கீடு | 2022 வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் இதற்காக நிதியேற்பாடுகள் ஒதுக்கப்படவில்லை என்பதுடன், இந் நிகழ்ச்சித்திட்டம் கனடா அரசாங்கத்தின் மானியத்தின் மூலம் நிதியளிக்கப்பட்டதாகவும் இலங்கை அரசாங்கத்தின் செலவுத் தலைப்பின் கீழ் எவ்வித செலவொன்றும் மேற்கொள்ளப்படவில்லை என்பதாகவும். | மானியங்களாக கிடைத்த தொகையின் அளவு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும்.. |

செய்யப்படாமையால் மொத்த தொகையும் சேமிப்பாக குறிப்பிடப்பட்டிருப்பது டுவது சரியானது அல்ல.

3.2 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் மோட்டார் வாகனப் பெறுமதி ரூபா 525,065,471 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும், நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்களில் 29 வாகனங்களின் பெறுமதி ரூபா 208,061,382 மட்டுமே காட்டப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பெறுமதி குறிப்பிடப்படாத 31 வாகனங்கள் எதிர்காலத்தில் மதிப்பீடு செய்யப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | திறைசேரி புத்தகங்களில் காட்டப்பட்டுள்ள பெறுமதி இனங் காணப்பட்டு அதன் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) திறைசேரிப்புத்தகத்தின் பிரகாரம் சுற்றுலா விடுதிகளின் பெறுமதி ரூபா 540,486,774 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அப் பெறுமதி நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் சுற்றுலா விடுதிகள் அமைந்துள்ள மஹியங்கனை, பொலன்னறுவை, மிகிந்தலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கதிர்காமம் போன்ற காணிகளின் உரிமையை அமைச்சிற்கு கையேற்பதற்கு முடியாதிருந்தது. | அமைச்சிற்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களில் பெறுமதி தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையொன்று வழங்குமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் திருத்தப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. விடுமுறை விடுதிகள் அமைந்துள்ள காணிகளின் உரிமை இந்த அமைச்சிற்குக் கையேற்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | திறைசேரி புத்தகங்களில் காட்டப்பட்டுள்ள பெறுமதி இனங் காணப்பட்டு அதன் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்படல் வேண்டும். |

3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களச் சுற்றறிக்கை பிரகாரம் இடமாற்றலாகிச் | இதுவரை தீர்க்கப்படாத மீதிகள் அறவிடப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | சுற்றறிக்கை பிரகாரம் முற்பண மீதிகள் தீர்க்கப்படல் வேண்டும்.. |

| | | | |
|---|---|---|---|
| | சென்ற உத்தியோகத்தரின் கடன் மீதிகள் 3 மாதங்கள் கடந்து விட்டதன் பின்னர் புத்தகங்களில் காட்டப்பட வேண்டியதில்லை என்ற போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் அவ்வாறு செய்யப்படாத மீதி ரூபா 775,976 ஆகும். கணக்காய்வுத் திகதி வரையில் மேலும் அறவிட வேண்டிய மீதி ரூபா 503,678 ஆகும். | | |
| (ஆ) | பல்வேறு காரணங்களால் சேவையிலிருந்து விலகிய 10 உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 1,129,842 என்பதுடன் அதில் ரூபா 408,878 ஆனது 05 வருடங்களுக்கு மேற்பட்டிருந்தது. | அறவிடப்பட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகள் எடுத்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2007 ஆம் வருடத்திலிருந்து 2010 ஆம் வருடம் வரையில் இலக்கம் 8A மனையில் எவரும் வசிக்காத காலப்பகுதிக்காக ரூபா 228,976 ஆன மின்சாரப் பட்டியலொன்று பெறப்பட்டமை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட நிலுவை மின்சாரப் பட்டியல் விரைவில் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு பிரதான பொறியியலாளர் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், 2022.05.05 இல் மீண்டும் நினைவூட்டல் கடிதமொன்றும் அனுப்பப்பட்டுள்ளது. | மின்சாரப் பட்டியல் தீர்க்கப்படல் வேண்டும். |

4. மனிதவள முகாமைத்துவம்
--------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 வரை செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் நிரந்தர பதவியணியில் சிரேஷ்ட நிலையில் 20, மூன்றாம் மட்டத்தில் 8, இரண்டாம் நிலையில் 124 மற்றும் ஆரம்ப மட்டத்தில் 12 உம் ஆக 164 வெற்றிடங்கள் காணப்பட்டன. | இதுவரை சில வெற்றிடங்கள் நிரப்பபட்டுள்ளதாகவும் மற்றும் ஏனைய பதவிகளை நிரப்புதல் அந்தந்த பிரிவுகளில் செயற்படுத்தப்படுவதாகவும் | வெற்றிட எண்ணிக்கை களை நிரப்புவதற்கு அல்லது திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர் மற்றும் இலங்கை கணக்காளர் சேவை | கணக்காளர் சேவையில் 6 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக ஒரே இடத்திலேயே | நீண்ட காலமாக ஒரே நிலையத்தில் |

உத்தியோகத்தர்கள் 6 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக ஒரே இடத்திலேயே சேவையாற்றி வருவதுடன் அந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை முறையே 309 மற்றும் 173 ஆக இருந்தது. அத்துடன் வருடாந்த இடமாற்றச் சுற்றறிக்கையின் பிரகாரம் சனாதிபதி, பிரதமர் அலுவலகங்களில் நிதி அமைச்சு மற்றும் ஆணைக்குழுவில் 47 உத்தியோகத்தர்கள் நிறுவனத் தலைவரின் உடன்பாடின்றி இடம் மாற்றம் செய்யப்படுவதற்கு முடியாதிருந்தனர்.

சேவையாற்றி வருகின்ற உத்தியோகத்தர்களில் , நிதி அமைச்சில் பணியாற்றும் 34 உத்தியோகத்தர்கள் உள்ளனர். சனாதிபதி மற்றும் பிரதம மந்திரி அலுவலகங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர் 8 பேர் உள்ளனர். ஆணைக்குழுக்களில் பணியாற்றும் உத்தியோகத்தர் 2 போ ஆகும். அரச சேவைகள் ஆணைக்குழு செயலாளரின் PSC/EST/05-04/01/2019 ஆம் இலக்க மற்றும் 2021.04.09 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் நிதி அமைச்சின் செயலாளரின் உடன்பாடின்றி மேற்கொள்ளப்பட முடியாது

பணியாற்றும் உத்தியோகத்தர் களை இடம் மாற்றல் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.